செய்தி வெளியீடு எண்.384/2010 நாள்:28.05.2010

**வேலூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு நினைவு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

வேலூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார். +2 தேர்வில் மெட்ரிக் பள்ளியில் முதலிடம் பிடத்த என்.கவிதா, 2-வது இடம் பிடித்த டி.ஜனனி, 3-வது இடம் பிடித்த எம்.பிரியதர்ஷினி, அரசு மேல்நிலைப்பள்ளிகளில் முதலிடம் பிடித்த பி.அமலா, 2-வது இடம் பிடித்த எஸ்.பவித்ரா, 3-வது இடம் பிடித்த எஸ்.உதயகுமார் ஆகியோர் பரிசுகளை பெற்றுக் கொண்டனர்.

அதே போல எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் முதலிடம் பிடித்த என்.ஹரினி பிரியா, வி.கவுசல்யா, 2-வது இடம் பிடித்த ஜி.முபீனா, 3-வது இடம் பிடித்த வி.லோகேஷ் பாபு, சி.ஹேமலதா ஆகியோர் பரிசுகளை பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.கோ.மூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கேபிரியேல், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அலுவலக மேலாளர் (பொது) திரு.கோவிந்தராஜ் மாணவ, மாணவியர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டி பரிசுகளை வழங்கியது, மாணவ, மாணவியர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.